**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.28/2024**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : கிருஷ்ணம்ம நாயுடு | மதம் : இந்து |
| த/பெ : வெங்கடப்ப நாயுடு | ஜாதி : -- |
| வயது : 62 | கிராமம் : பனப்பாக்கம் |
| தொழில் : விவசாயம் | வட்டம் : திருத்தணி |

**17.09.2025**
**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

11. 2010ல் நான், ஜெயலட்சுமி, சுப்பிரமணி, கோவிந்தராஜ், ராமதாஸ், கருணாகரன் ஆகியோர்தான் பெரமனேனி வெங்கடப்ப நாயுடுக்கு வாரிசுகள் என்று பரிகாரம் கேட்டு இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.126/2010 தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். பெரமனேனி வெங்கடப்ப நாயுடுக்கு சரஸ்வதியம்மாள், பத்மாவதியம்மாள், கோவிந்தம்மாள் ஆகிய 3 பெண் மக்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். அ.வ.எண்.126/2010 வழக்கில் பத்மாவதியம்மாளை வாரிசாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். எனது மனைவி பஞ்சயாத்து உதவியாளராக பணிபுரிகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தின் அகலம், நீளம் சொல்ல முடியுமா என்றால் தெரியாது.

12. நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1963ல் பிறந்தேன். நான் பிறப்பதற்கு முன்பு வழக்கு சொத்தின் பரிமாற்றங்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். புல வரைபடத்தில் வழக்கு சொத்து எங்கு உள்ளது என்பதை என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியாது. தாவா சொத்தின் நான்கு எல்லைகள் சொல்ல முடியுமா என்றால் குப்புசாமி நாயுடு வீட்டிற்கு மேற்கே ஆற்காடு குப்பம் சாலைக்கு வடக்கு, முனிநாயுடு குப்பைகிடங்கிற்கு தெற்கே உள்ளது. இன்னொரு பக்கம் எனக்கு தெரியவில்லை. நான் இந்த வழக்கில் என்ன நான்கு எல்லை தாக்கல் செய்துள்ளேன் என்று சொல்ல முடியுமா என்றால் தெரியவில்லை. நான் பிரதிவாதிகளுக்கு

சொந்தமான நான்கு எல்லை தான் சொல்லியுள்ளேன் என்றாலும் வழக்கு சொத்தின் நான்கு எல்லை சொல்லவில்லை என்றாலும் பத்திரத்தில் உள்ளதை சொல்கிறேன்.

13. வழக்கிற்கு 10 வருடங்களுக்கு முன்பு வீடு இடிந்து போனதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. அந்த வீட்டிற்கு வீட்டு வரி ரசீதோ, பட்டாவோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் பட்டா மாற்றவில்லை. ஆவணம் மட்டும் தாக்கல் செய்துள்ளேன். வீட்டு வரிவிதிப்பு எண், மின் இணைப்பு எண் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ 1 ன் அசல் பத்திரம் எங்கு உள்ளது என்றால் எங்கள் குடிசை வீடு எரிந்த போது மொத்த ஆவணங்களும் எரிந்துவிட்டது. எனவே நகல் தாக்கல் செய்யவில்லை. வீடு எரிந்து போனது என்றும் அத்துடன் அசல் ஆவணங்கள் எரிந்து போனது என்றும் நான் ஏதேனும் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் புகாரே கொடுக்கவில்லை. பெரமனேனி வெங்கடப்ப நாயுடுக்கும் காமனிபள்ளி வெங்கடப்ப நாயுடுக்கு என்ன உறவு என்றால் பெரமனேனி வெங்கடப்ப நாயுடு மாமனார், காமனிபள்ளி வெங்கடப்ப நாயுடு மருமகன் ஆவார்.

14. என் தாத்தாவின் அப்பா பெயர் காமனிபள்ளி வெங்கடப்ப நாயுடு என்றால் சரிதான். பெரமனேனி வெங்கடப்ப நாயுடுக்கும் காமனிபள்ளி வெங்கடப்ப நாயுடுக்கு என்ன உறவு என்றால் தெரியாது. என் தாத்தா செங்கல்வராய நாயுடு என்றால் சரிதான். ராமா நாயுடு, கிருஷ்ணா நாயுடு, செங்கல்ரவராய நாயுடு, நாராயணசாமி நாயுடு ஆகியோர் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். ராமா நாயுடு, கிருஷ்ணா நாயுடு, செங்கல்ரவராய நாயுடு, நாராயணசாமி நாயுடு ஆகியோர் சேர்ந்து பிரதிவாதிக்கு சொத்தை விற்றுள்ளார்கள் என்றால் அது பெரமனேனி வெங்கடப்ப நாயுடு சொத்தாகும். வெங்கடப்ப நாயுடு என்ற பெயரை வைத்து கொண்டு நான் பொய்யாக வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 பத்திரத்தில் உள்ள சொத்திற்கும் இந்த வழக்கில் சொல்லியுள்ள சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் பிரதிவாதியின் சொத்திற்கான நான்கு எல்லைகளை நான் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.

15. என் சொத்து கிழமேல் நீளம் அதிகமா, தென்வடல் அதிகமா என்றால் கிழமேல்தான் நீளம். **(சாட்சி தற்போது பின்வருமாறு மாற்றி கூறுகிறார்)** தெரியாது. பிரதிவாதி ராமசந்திர நாயுடு, கோவர்தன், சத்தியா, விஜயா, கௌசல்யா, யமுனா ஆகியோர்

தாவா சொத்தில் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் மொத்தம் 3 ஷெட் போட்டுள்ளார்கள். அவர்கள் அனுபவிக்கவில்லை. என் மனைவி பஞ்சாயத்து உதவியாளராக இருப்பதால் வரி ரசீது கேட்ட போது ஆவணங்களை பார்த்துவிட்டு என் மனைவி வரி ரசீது போட மறுத்ததோடு இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டார் என்றால் இல்லை. நான் பிறப்பதற்கு முன்பே தாவா சொத்தை பிரதிவாதிகளின் மூதாதையருக்கு விற்று அவர்கள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் எந்த உரிமையும் இல்லாமல் பொய்யாக வழக்கு தாக்கல் செய்த அலைகழிவு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)